# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 19/மா/2023**
**நாள் : 11.02.2023**

திருமதி. ஹுஸைனியாபானு,
சென்னை – 600 030. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம்-8, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, ஷெனாய் நகர், வெங்கடாஜலபதி தெரு, எண்.18 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி திருமதி. ஹுஸைனியாபானு என்பவரின் நாளிடப்படாத மனு 30.01.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 19/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, ஷெனாய் நகர், வெங்கடாஜலபதி தெரு, எண்.18 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி திருமதி. ஹுஸைனியாபானு என்பவர் தனது முறையீட்டு மனுவில், பின்வரும் புகார் அளித்துள்ளார்:-

> "The petitioner purchased the land and building in Door No.44/18, Venkatachalapathy Street, Shenoy Nagar, Chennai - 600 030 and thereafter she had submitted an application for name transfer for assessment of property tax from the previous owner name Mr. Varadhan to Hussaineya Banu. The Corporation had changed the name to pay property tax from Mr. Varadhan to Hussaineya Banu by considering the petitioner's application and the petitioner had remitted the property tax and got receipt in her name (Hussaineya Banu). All of sudden, there is change in issuing property tax receipt. The corporation had issued property tax receipt in the name of Mr. Varadhan instead of Hussaineya Banu. Immediately, the petitioner approached the concerned authority and enquired the matter. The authority concerned informed that some error has occurred in computer while updating some particulars and the same would be rectified soon. From which, the petitioner approached the concerned authority and requested him to rectify the error and petitioner went from pillar to post but during that period so many staff were transferred, but, there is no avail.

Further, the petitioner submitted a written representation with supporting documents on 14.06.2022 and also a reminder has been submitted on 02.01.2023 and requested the Corporation authorities to rectify the error and enable the petitioner to pay property tax and get receipt in her name. It is much regretted to inform that the petitioner is paying property tax to her own building, but, the corporation issues receipt in third party name which causes mental agony for the petitioner. The petitioner submits that the representation submitted by him is pending for a very long time.

Therefore, the petitioner request the Hon'ble Tamilnadu Ombudsman that the stated facts may kindly be considered and the Hon'ble court may be pleased to issue an order to rectify the error that occurred in computer and enable the petitioner to pay the property tax and get receipt in her name and thus render justice" எனத் தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 8ன் உதவி ஆணையர்/மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது அவர் தனது 03.02.2023 நாளிட்ட அறிக்கையில்:-**

1. மனுதாரர் திருமதி. ஹுஸைனியாபானு அவர்கள் சென்னை – 600 030, செனாய் நகர், வெங்கடாசலபதி தெரு, எண்.44/18 என்ற முகவரியில் உள்ள வீட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி சொத்துவரியில் பெயர் மாற்றம் தொடர்பாக மனு கொடுத்தார்.
2. அம்மனுவின் மீது பெயர் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஆவணங்களை சரிபார்க்கும்போது வீட்டிற்கான மூல ஆவணங்கள் சரிவர இணைக்கவில்லை என்பது தெரியவந்தது.
3. இதன் தொடர்பாக சம்மந்தப்பட்ட கோட்ட வரி மதிப்பீட்டாளர் மனுதாரரின் வீட்டிற்கு நேரடியான கள ஆய்வு சென்றபோது வீட்டின் உரிமையாளர் இல்லாத நிலையில் அங்கு வசிக்கும் வாடகைதாரர்கள் மூலமாக உரிமையாளர் மதுரையில் இருப்பது தெரியவந்தது. அந்நேரத்தில் வீட்டின் உரிமையாளர் அவர்களை தொடர்பு கொள்ள இயலவில்லை. இதன் காரணமாக பெயர் மாற்றம் தொடர்பான மனுவின் மீது மேல் நடவடிக்கை எடுக்க இயலவில்லை.
4. திருமதி. ஹுஸைனியாபானு அவர்களின் உதவியாளர்கள் கடந்த 02.02.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகம் -08ல் நேரடியாக வருகை தந்து வீட்டிற்கான மூல ஆவணங்களை தபால் பிரிவில் வழங்கினார்கள்.
5. பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட தற்போதைய கோட்ட வரி மதிப்பீட்டாளரால் சொத்துவரியில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதற்கான ஆணை (படிவம்-09) 02/02/2023 அன்று வழங்கப்பட்டது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 06.02.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 31.01.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**6.2.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. தனக்கு ஏற்பட்ட உடல் நலக் குறைவின் காரணமாக அவரது அனுமதியின் பேரில் அவரது சார்பாக அவரது மேலாளர் ஆஜராகி கீழ்காணும் வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"திரு வரதன் என்பவரிடமிருந்து மேற்கண்ட சொத்தை திருமதி. ஹுஸைனியா என்பவரால் வாங்கப்பட்டு, மேற்கண்ட திருமதி. ஹுஸைனியா பெயரில் சொத்து வரி

பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கடந்த 2010 –ம் ஆண்டு வரை திருமதி. ஹுஸைனியா பெயரில் சொத்து வரி கேட்பு பெறப்பட்டது. ஆனால் 2011ம் ஆண்டு முதல் கடந்த 10 ஆண்டுகளாக மேற்கண்ட சொத்தின் முன்னாள் உரிமையாளரான திரு. வரதன் என்பவரின் பெயரிலேயே சொத்து வரி கேட்பு மாநகராட்சியால் அனுப்பப்பட்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளின் சொத்து வரி கேட்பின் நகல்களை இன்னும் மூன்று நாட்களில் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

இது தொடர்பாக மாநகராட்சி அலுவலர்களிடம் பலமுறை புகார்கள் அனுப்பப்பட்டன. இது தொடர்பாக ஒரு சில ஆவணங்களை கேட்டுப் பெற்ற மாநகராட்சி அலுவலர்கள் புகாரின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இம்முறை மன்றத்தில் அளிக்கப்பட்ட புகாரையொட்டி கடந்த 2.2.2023 அன்று திரு வரதன் என்பவரின் பெயரிலிருந்து திருமதி. ஹுஸைனியா என்பவரின் பெயருக்கு சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 08ன் உதவி வருவாய் அலுவலர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோர் 06.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர் :**

"மனுதாரரின் வீட்டிற்கு சொத்து வரி பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக மனு பெறப்பட்டு, அம்மனுவின் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்கண்ட சொத்து வரி பெயர் மாற்றம் செய்தபோது முதலில் வீட்டின் உரிமையாளரான திரு. வரதன் என்பவரின் பெயரில் இருந்து வந்தது. பின்னர், திருமதி. ஹுஸைனியா என்பவரின் பெயருக்கு சொத்து வரி கேட்பு கையேடு முறையில் 1996ஆம் ஆண்டு மாற்றப்பட்டது. அதன் பின்னர் கணினியில் பதிவேற்றம் செய்யும்போது மீண்டும் வரதன் என்பவரின் பெயருக்கே சொத்து வரி கேட்பு தவறுதலாக மாநகராட்சி அலுவலர்களால் ஏற்றப்பட்டது. மனுதாரர் தற்போதுவரை வரதன் என்ற பெயரிலேயே சொத்துவரி செலுத்தி வந்துள்ளார். மேற்கண்ட தவறு 2.2.2023 அன்று சரிசெய்யப்பட்டு அதன் விவரத்தை மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட சொத்து வரி கேட்பு தற்போது மனுதாரர் திருமதி. ஹுஸைனியா என்பவரின் பெயரில் உள்ளது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' எனத் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வு தொடர்பான மண்டல அலுவலர்–8 அவர்களின் 3.2.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, மனுதாரரின் ஒப்புதலுடன் அவரது சார்பாக ஆஜரானவரின் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-8ன் உதவி வருவாய் அலுவலர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி**

**மண்டலம்-8ன் உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 7 ஷெனாய் நகரில் இருக்கும் திருமதி. ஹுஸைனியா பானு என்பவர், சென்னை செனாய் நகர், வெங்கடாஜலபதி தெரு, கதவு இலக்க எண்44/18ல் உள்ள வீட்டை திரு. வரதன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்று அவ்வீட்டிற்கு தன்னுடைய பெயரில் சொத்துவரி மாற்றம் செய்யப்பட்டதாகவும், ஆனால் கடந்த 10 வருடங்களாக அவ்வீட்டை விற்ற முன்னாள் உரிமையாளர் திரு. வரதன் பெயரில் சொத்துவரி கேட்பு நோட்டீஸ் மாநகராட்சியால் வழங்கப்பட்டு வருவதாகவும், அதனை சரிசெய்ய உரிய ஆவணங்களுடன் புகார் மனு அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8 அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் புகார் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் குறிப்பிட்டவாறு மனுதாரர் கிரையம் செய்த வீட்டிற்கு கடந்த பல வருடங்களாக வீட்டின் முன்னாள் உரிமையாளர் திரு. வரதன் பெயரில் சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதும் மனுதாரர் கடந்த 14.6.2022 அன்று இது குறித்து மனு அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8இன் அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அறிய முடிகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8ன் உதவி வருவாய் அலுவலர் மற்றும் வரி மதிப்பீட்டாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் உதவி ஆணையர் / மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவற்றில் சொத்துவரி திருமதி ஹுஸைனியா பானு என்பவரின் பெயருக்கு சொத்துவரி கேட்பு கையேடு முறையில் 1996-ஆம் ஆண்டு மாற்றப்பட்டு, பின்னர் கணினியில் பதிவேற்றம் செய்யும் போது மீண்டும் வரதன் என்பவரின் பெயருக்கே சொத்து வரி கேட்பு தவறுதலாக மாநகராட்சியால் ஏற்றப்பட்டு, இத்தவறு 2.2.2013 அன்று சரி செய்யப்பட்டு தற்போது சொத்துவரி கேட்பு திருமதி. ஹுஸைனியா பானு என்பவரின் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்பது அறியமுடிகிறது.

**பரிசீலனைக்குப்பின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.**

மனுதாரர் வீட்டிற்கான சொத்துவரி பெயர் மாற்றம் குறித்து மனு அளித்தவுடன் நடவடிக்கை எடுக்காமல், பல வருடங்களாக மனுதாரரின் வீட்டை கிரையம் செய்த முன்னாள் உரிமையாளர் திரு. வரதன் பெயரில் சொத்துவரி கேட்பு நோட்டீஸ் அனுப்பியது கண்டிக்கத்தக்கது ஆகும். மனுதாரரின் பெயரில் இருந்த சொத்து வரி, கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட போது தவறு ஏற்பட்டது என்ற பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8ன் அலுவலர்களின் கூற்று ஏற்கத்தக்கதல்ல. கணினியில் பதிவேற்றம் செய்தபோது ஏற்பட்ட தவறு பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-8ன் அலுவலர்கள் தங்களுடைய பணியை சரிவர செய்யவில்லை என்றே இம்முறைமன்றம் கருதுகிறது. எனவே, கணினியில் தவறுதலாக பதிவேற்றம் செய்த பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-8ன் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மீது தேவையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், இதுப்போன்ற தவறுகள் மீண்டும் ஏற்படாவண்ணம் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-8ன் அலுவலர்கள் தங்கள் பணியை முறையாகவும், முழு ஈடுபாட்டுடன் செயல்படுகிறார்களா என்பதை அவ்வப்போது ஆய்வு

செய்து உறுதி செய்யுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8ன் உதவி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. ஹுசைனியா பானு,
18, வெங்கடாஜலபதி தெரு,
ஷெனாய் நகர்,
சென்னை – 600 030.

2) உதவி ஆணையர்,
மண்டலம்-8, பெருநகர சென்னை மாநகராட்சி,
36B, 2வது குறுக்குத் தெரு, புல்லா அவின்யு, ஷெனாய் நகர்,
சென்னை -600 030.

3) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

4) துணை ஆணையர், (பணிகள்)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
*He is requested to ensure the implementation of this order*

5) துணை ஆணையாளர்,
மண்டலம்–8, பெருநகர சென்னை மாநகராட்சி,
புதிய எண்.36B, புல்லா அவென்யூ,
ஷெனாய் நகர், சென்னை – 600 030.

6) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக